தினமணி

அதிகாரிகள் ஆய்வால் ஈமு பண்ணைகளுக்கு பூட்டு: 50 ஆயிரம் ஈமு கோழிகள் தீவனம் இன்றி தவிப்பு

First Published : 10 Aug 2012 03:11:47 AM IST



ஈரோடு, ஆக. 9: ஈரோடு மாவட்டத்தில் ஈமு கோழிப் பண்ணை நிறுவனங்களில் அதிகாரிகள் ஆய்வு செய்து வருவதால் பெரும்பாலான ஈமு கோழிப் பண்ணைகள் கடந்த 2 நாள்களாக பூட்டப்பட்டுவிட்டன. இதனால், இங்குள்ள ஈமு கோழிகள் தீவனம் இன்றி பசியால் தவித்து வருகின்றன. பசியால் இதுவரை 10 கோழிகள் இறந்துவிட்டன.

தமிழகத்தில் முதல்முறையாக பெருந்துறையில் தான் கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்பு ஈமு கோழிப் பண்ணை தொடங்கப்பட்டது. இங்கு மட்டுமின்றி கோபி, சத்தி, பவானி, மொடக்குறிச்சி உள்ளிட்ட இடங்களிலும் சுமார் 70-க்கும் மேற்பட்ட பண்ணை நிறுவனங்கள் இப்போது இயங்கி வருகின்றன.

ஈமு கோழிப் பண்ணை தொடர்பாக தொடர்ந்து புகார்கள் எழுந்துள்ளதால் இப்போது அரசு அதிகாரிகள் அதிரடியாக சோதனை செய்து வருகின்றனர். இதைத் தொடர்ந்து கடந்த 2 நாள்களாக ஈமு கோழிப் பண்ணை உரிமையாளர்கள் தங்களது பண்ணைகளை பூட்டிவிட்டு வெளியூர்களுக்கு கிளம்பிவிட்டனர்.

பண்ணைகளிலும் ஊழியர்கள் இல்லை. இதனால், கடந்த 2 நாள்களாக ஈமு கோழிகளுக்கு தீவனம் கொடுக்கக்கூட ஆள்கள் இல்லை. இந்நிலையில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள பண்ணைகளில் சுமார் 50,000 ஈமு கோழிகள் தீவனம் இன்றி தவித்து வருகின்றன.

ஒரு கோழி 750 கிராம் தீவனம் சாப்பிடும் என்பதால் அரசு சார்பிலும் இக்கோழிகளுக்கு தீவனம் வழங்க இயலாத நிலை உள்ளது. அவ்வாறு வழங்கினால் தினமும் ரூ.1 கோடி வரை செலவு செய்ய வேண்டி வரும் என கால்நடைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதிகாரிகள் ஆய்வு: இந்த நிலையில்க. 9: ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஈமு கோழிப் பண்ணைகளில் மாவட்ட வருவாய் அலுவலர் சு.கணேஷ் மேற்பார்வையில் வட்டாட்சியர்கள் தலைமையிலான அதிகாரிகள் வியாழக்கிழமை திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் உத்தரவின் பேரில் இந்த அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.

ஈரோடு, பெருந்துறை, சத்தி, பவானி, கோபி வட்டாட்சியர்கள் தலைமையில் அதிகாரிகள் அனைத்து ஈமு கோழிப் பண்ணை நிறுவனங்களிலும் வியாழக்கிழமை திடீர் சோதனை செய்தனர்.

மாவட்ட வருவாய் அலுவலர் கணேஷ் தலைமையிலான அதிகாரிகள் சுசி ஈமு நிறுவனத்தில் வியாழக்கிழமையும் ஆய்வு செய்தனர்.

இது குறித்து மாவட்ட வருவாய் அலுவலர் கணேஷ் கூறியது:

ஈமு கோழி நிறுவனங்களில் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறோம். ஈமு கோழி நிறுவன உரிமையாளர்கள் தங்களது நிறுவன நிதி இருப்பு குறித்த அறிக்கையை மாவட்ட நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளோம். ஆனால், இதுவரை யாரும் ஒப்படைக்கவில்லை.

இதுபோல ஆட்டுப்பண்ணை, வான்கோழிப் பண்ணை, தேங்காய் பண்ணை, அகர் மரப்பண்ணை, கொப்பரைப் பண்ணை நடத்தி வரும் நிறுவனங்களிலும் ஆய்வு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார்.

## பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 36.63 அடி

First Published : 10 Aug 2012 09:20:24 AM IST

ஈரோடு, ஆக.10: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 36.63 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 878 கன அடி நீர் வந்தது.

அணையில் இருந்து ஆற்றில் 850 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர்இருப்பு 1.95 டி.எம்.சி.

## கன மழை : கபினியில் இருந்து 12,000 கன அடி உபரி நீர் திறப்பு


First Published : 09 Aug 2012 02:37:28 PM IST

பெங்களூரு, ஆக., 09 : கர்நாடகவில் கன மழை பெய்து வருவதன் காரணமாக கபினி அணை வேகமாக நிரம்பி வருகிறது. அதன் பாதுகாப்பை கருத்தில் கொண்டு கபினி அணையின் மதகுகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால் கபினி அணையில் இருந்து 12,000 கன அடி உபரி தண்ணீர் காவிரியில் திறந்துவிடப்பட்டுள்ளது.

இந்த தண்ணீர் நாளை இரவு மேட்டூர் அணையை வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மழை நீடித்தால், தொடர்ந்து மேட்டூருக்கு வரும் நீரின் அளவும் அதிகரிக்கும். தற்போது மேட்டூர் அணையின் நீர்மட்டம் 73 அடியாக உள்ளது.

## நெல் நாற்றங்காலில் பூச்சிகளை கட்டுப்படுத்துவது எப்படி?

First Published : 09 Aug 2012 01:15:45 AM IST



நாற்றங்காலும், அதை தாக்கும் பூச்சிகளும்.

புதுச்சேரி, ஆக. 8: நாற்றங்காலில் நெல் நாற்றுவிடும் சமயத்தில் உருவாகும் பூச்சிகளை சுற்றுச் சூழலுக்கு பாதிப்பில்லாமல் இயற்கை வழியிலும், உயிர்ரக மருந்துகளை பயன்படுத்தியும் கட்டுப்படுத்தலாம்.

தற்போது புதுச்சேரி மற்றும் தமிழக பகுதிகளில் சம்பா பருவதுக்கான நெல் விதைகள் விதைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நெல் நாற்றங்காலை, சுற்றுச்சூழல் பாதிப்பில்லாமல் முறையாக பாதுகாக்க முடியும். சம்பா பருவ நெல் சாகுபடிக்காக, வெள்ளைப் பொன்னி, பொன்மணி (சி.ஆர். 1009) அல்லது சாவித்திரி,

பாபட்டலா, ஐ.ஆர். 20 மற்றும் பின் சம்பா ரகமான ஆடுதுறை 39 போன்ற ரகங்களை விவசாயிகள் தேர்வு செய்து சாகுபடிசெய்து வருகின்றனர்.

இவ்வாறு சாகுபடி செய்யும்போது ஒற்றை நெல் சாகுபடி முறைகளை பயன்படுத்தலாம். இதன் மூலம் விதைகள், நீர் மற்றும் உரங்களின் அளவு குறைந்து விவசாயிகள் கூடுதல் லாபம் பெற முடியும்.

உயிர்ரக பூச்சிக்கொல்லிகள்...

மேலும் நெல் நாற்றங்காலில் தோன்றக்கூடிய பூச்சிக்கொல்லிகளை கட்டுப்படுத்த ரசாயன பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்த தேவையில்லை.

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத உயிர்ரக பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்தலாம். இதன் மூலம் விவசாயிகளுக்கு நன்மை விளைவிக்கும் பூச்சிகளை அழியாமல் பாதுகாக்க முடியும்.

நெல் நாற்றங்காலை சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இல்லாதவாறு எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்து பூச்சியியல் வல்லுநர் நி.விஜயகுமார் கூறியதாவது:

நாற்றங்கால் தயார் செய்யும் போது நாற்றங்கால் படுக்கைகளை மேடான இடத்தில் அமைக்க வேண்டும்.

விளக்கு கம்பங்களுக்கு அருகிலேயே நாற்றங்கால் அமைக்கக் கூடாது. ஒரு சதுர மீட்டர் நாற்றங்கால் பரப்பளவில் உள்ள படுக்கைகளை 50 கிராம் பாக்டீரிய உயிர் ரக நோய்க்கொல்லியான சூடோமோனாஸ் ஃபுளோரசன்ஸ் மற்றும் 200 கிராம் வேப்பம் புண்ணாக்கு அல்லது புங்கம் புண்ணாக்கு ஆகியவற்றுடன் கலந்து பின் நாற்றங்கால் தயார் செய்ய வேண்டும்.

நாற்றங்காலில் விதை விதைப்பதற்கு முன் விதை நேர்த்தி செய்ய வேண்டும். இதனால் விதை மூலம் பரவும் நோய்கிருமிகளை பரவாமல் தடுக்கலாம்.

இலைப்பேன் தாக்குதல்: விதை விதைத்த 10 நாள்களுக்குள் நாற்றின் முனைப்பகுதி கருகி, இலையானது சிறிது சிறிதாக மஞ்சள் நிறமாக மாறினால் அது இலைப்பேன் என்ற பூச்சி தாக்குதலின் அறிகுறியாகும்.

இதை உறுதி செய்ய உள்ளங்கையை நாற்றாங்கால் நீரில் நனைத்து நாற்றின் மீது தடவி உள்ளங்கையை திருப்பி பார்த்தால் கருப்பு நிறத்தில் சிறிய பேன்கள் இருக்கும்.

இதனை கட்டுப்படுத்த, ஒரு சென்ட் நாற்றாங்காலுக்கு ஒரு லிட்டர் தண்ணீர் எடுத்து அதனை விசை தெளிப்பான் கொண்டு நாற்றங்கால் இலையின் முனைப்பகுதியில் படும்படி பீய்ச்சி அடிப்பதால் இலைப்பேன்கள் கீழே விழுந்துவிடும். பின்பு நாற்றங்காலில் உள்ள தண்ணீரை வடிகட்டுவதன் மூலம் இலைப்பேன் தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.

விசைத் தெளிப்பான் வைத்திராத விவசாயிகள், நாற்றங்காலை நீரில் 10 நிமிஷங்கள் முழுவதும் நனையுமாறு மூழ்கடித்து பின் நீரினை வடிகட்டுவதால் இலைப்பேன் தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.

இதற்குப்பின் ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு 10 மில்லி 3 சத வேப்ப எண்ணெய்யை 10 கிராம் ஒட்டுத் திரவத்துடன்( டீப்பால், டிரைட்டான், சேண்டோவிட்) சேர்த்து நாற்றங்கால் இலைப்பரப்பில் தெளிப்பதால் இலைப்பேன்கள் கசப்பு தன்மை காரணமாக விலகி ஓடிவிடும் அல்லது இறந்துவிடும்.

குட்டைக் கொம்பு வெட்டுக்கிளி: விதைத்த 10 லிருந்து 15 நாட்களுக்குள் தோன்றக்கூடிய குட்டைக் கொம்பு வெட்டுக்கிளியை கட்டுப்படுத்த வேப்பம் எண்ணெய்யே போதுமானதாகும்.

மேலும், நாற்றங்காலில் 10 "வி' வடிவ குச்சிகள் வைப்பதால், பறவைகள், குருவிகள், மைனா, கோட்டான் போன்றவைகள் அதன்மீது அமர்ந்து குட்டை கொம்பு வெட்டுக்கிளிகளையும், இலை உண்ணும் புழுக்களையும், பறக்கும் தாய்பூச்சிகளையும் உண்டுவிடும்.

இலை சுருட்டுப் புழு: நாற்றங்காலில் தோன்றக் கூடிய இலை சுருட்டுப்புழுவின் தாக்குதலை குறைக்க ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் "பெவேரியா பேசியானா' என்ற உயிர்ரக பூச்சிக்கொல்லியை அதிகாலைப் பொழுதில் கைத் தெளிப்பான் மூலம் 200 லிட்டர் நீரினை பயன்படுத்தி தெளிப்பதால் புழுக்களின் மீது நோய் உருவாக்கி புழுக்களை அழிக்கலாம்.

பச்சை தத்துப்பூச்சி: நாற்றங்கால் வயது 15 முதல் 20 நாட்கள் உள்ள தருணத்தில் நாற்றுக்களின் இலைகள் மஞ்சள் நிறமாக மாறினால் அது பச்சை தத்துப்பூச்சியின் தாக்குதலின் அறிகுறியாகும்.

இதை நிவர்த்தி செய்ய 5 சீத்தாபழங்களில் உள்ள கொட்டைகளை லேசாக இடித்து 1 லிட்டர் தண்ணீரில் ஒரு இரவு முழுவதும் (12 மணி நேரம்) வைத்திருந்து அந்த சாற்றினை மறுநாள் காலையில் மெல்லிய துணியில் வடிகட்டி நாற்றங்காலில் தெளித்தால் கட்டுப்படும்.

செஞ்சிலந்தி தாக்குதல்: தட்பவெப்பநிலை மாற்றம் காரணமாக நிலவும் ஒடுக்கத்துடன் கூடிய அதிகமான வெப்பநிலையால் செஞ்சிலந்திகளின் தாக்குதல் நெல் நாற்றுக்களில் தோன்றி இலைகள் மீது சிகப்பு வண்ண திட்டுக்கள் ஏற்படும்.

இதனை கட்டுப்படுத்த ஒரு சத புங்கம் எண்ணெய் (1 மில்லி ஒரு லிட்டர் நீரில்) அல்லது டைக்கோபால் (1.5 மில்லி ஒரு லிட்டர் நீரில்) அல்லது நனையும் கந்தகம் (1 கிலோ 8 சென்ட் நாற்றங்கால்) தெளிக்க வேண்டும். இதன் மூலம் செஞ்சிலந்தி தாக்குதல் கட்டுப்பாடும்.

சாறு உறிஞ்சும் பூச்சிகள்: நாற்றங்கால் வரப்புகளை புல், பூண்டு மற்றும் களைகள் இல்லாதவாறு நன்கு செதுக்கி சுத்தமாக வைத்திருப்பதால் சாறு உறிஞ்சும் பூச்சிகள் நாற்றங்காலை தாக்காதவாறு பாதுகாக்கலாம்.

இவ்வாறான முறைகளை பயன்படுத்தி விவசாயிகள் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பில்லாமல் நாற்றங்காலை பாதுகாக்க முடியும். செலவும் விவசாயிகளுக்கு குறையும் என்றார் அவர்.

கறவை மாட்டுப் பண்ணைகளில் இயந்திரங்களின் பயன்பாடுகள்

First Published : 09 Aug 2012 01:15:06 AM IST



தீவனங்களை வெட்டுவதற்காக பயன்படுத்தப்படும் இயந்திரம்.

நாமக்கல்: பண்ணைகளில் அதிக எண்ணிக்கையில் கறவை மாடுகளைப் பராமரிக்கும் போது அதிகப்படியான ஆள்களும், அதிக நேரமும் தேவைப்படுகிறது. வேலையாள்களின் தேவையைக் குறைக்கவும், நேரத்தை மிச்சப்படுத்தவும், சுகாதாரமான முறையில் பால் உற்பத்தி செய்வதற்கும் இயந்திரங்களைப் பயன்படுத்துவது அவசியமாகிறது.

இதுகுறித்து நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி விரிவாக்கத் துறை பேராசிரியர்கள் நா. நர்மதா, வே.உமா, மொ. சக்திவேல் ஆகியோர் கூறியது:

பால் கறவை இயந்திரம்..: பத்து கறவை மாடுகளுக்கு மேல் வைத்திருப்பவர்களுக்கு பால் கறவை இயந்திரத்தைப் பயன்படுத்துவது லாபகரமாக இருக்கும். இந்தக் கறவை இயந்திரம் மூன்று பேர் செய்யக்கூடிய வேலையைச் சுலபமாக செய்து முடித்துவிடும். மேலும், இந்த இயந்திரம் மூலம் சுகாதாரமான முறையில் பால் உற்பத்தி செய்ய முடிவதுடன், கையால் கறப்பதைவிட 50 சதம் குறைந்த நேரத்தில் முழுமையாகப் பாலைக் கறந்து விடலாம். இதனால், கறவை மாடுகளின் எண்ணிக்கைகளை அதிகப்படுத்தி குறைந்த பராமரிப்புச் செலவில் அதிகப் பால் உற்பத்தி செய்ய முடிகிறது. குறிப்பிட்ட நேரத்தில் சீரான முறையில் பால் கறப்பதால் கறவை மாடுகளுக்கு மடிநோய் வராமலும் தடுக்க முடியும்.

இயங்கும் முறை..: மாட்டின் மடியில் சேர்ந்திருக்கும் பாலை காம்பில் பொருத்தும் குழாய்கள் மூலம் உறிஞ்சுவதால் பால் கறக்கப்படுகிறது. காம்புக்கு விட்டு விட்டு அழுத்த நிலை கொடுக்கப்படுகிறது.

இடையிடையே பால் உறிஞ்சும் செயலும் நடைபெறுகிறது. அழுத்தும் நிலை, உறிஞ்சும் நிலை என்று மாறி மாறி ஏற்படுவதால் பால் கறக்கும் செயலானது இயற்கையில் கன்று பாலைக்

குடிப்பது போன்ற உணர்ச்சியைத் தாய்ப் பசுவிற்கு அளிக்கிறது. பால் வரும் குழாய் கண்ணாடி ஆனதால் பால் வருவதைக் கவனித்து, பால் வராத சமயத்தில் இயந்திரத்தை நிறுத்த முடிகிறது.

பால் கறப்பதற்கு முன்பு கைகளைக் கிருமி நாசினி கொண்டு சுத்தமாகக் கழுவ வேண்டும். மடியைச் கிருமி நாசினி கொண்ட தண்ணீரால் கழுவி, பின்பு உலர்ந்த சுத்தமான துணியால் துடைக்க வேண்டும். பால் கறவை இயந்திரத்தை உபயோகிக்கும் முன்பு சிறிதளவு பாலை, கறுப்புத் துணி கொண்டு மூடிய சிறிய கிண்ணத்தில் கறந்து பார்ப்பதன் மூலம் பாலின் தரத்தை நிர்ணயம் செய்ய முடியும்.

உறிஞ்சும் குழாயைப் பசுவின் காம்பில் வைத்து கறவை இயந்திரத்தை இயக்க வேண்டும். பால் கறந்த பின் காம்புகளைக் கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்வதால் மடி வீக்க நோய் வருவதிலிருந்து பாதுகாக்கலாம்.

தீவன நறுக்கி..: கால்நடைகளுக்கு பசுந் தீவனம் மற்றும் உலர் தீவனங்களை அப்படியே தீவனத் தொட்டியில் போடுவதை விட சிறு சிறு துண்டுகளாக நறுக்கிப் போடுவதன் மூலம் கால்நடைகளின் தீவனம் உள்கொள்ளும் அளவு கூடுவதோடு, சேதாரத்தை 20 முதல் 30 சதம் வரை குறைக்க முடியும். கால்நடைகள் இலை, தண்டு என்று பாகுபாடு இன்றி அனைத்துப் பாகங்களையும் உள்கொள்வதுடன் தீவனத்தின் செரிமானத் தன்மையும் கூடுகிறது. மேலும், கால்நடைகளுக்குக் கிடைக்கும் நிகர எரிசக்தியின் அளவும் அதிகரிக்கிறது.

இந்தக் கருவி மின் மோட்டார் இணைப்புடனும் கிடைக்கிறது. மின் இணைப்பு இல்லாத இடங்களில் பயன்படுத்தும்படி, கையால் இயங்கும் வகையிலும் கிடைக்கிறது. தவிர, டீசல் என்ஜின், டிராக்டர் வண்டியுடன் இணைந்து செயல்படும் இயந்திர மாதிரிகளும் உள்ளன. இதில், கைகளால் இயக்கும் இயந்திரம் மூலம் மணிக்கு 50 முதல் 70 கிலோ தீவனங்களை நறுக்க முடியும்.

ஒரு குதிரைத் திறன் (ஹெச்பி) சக்தியுடைய மின் மோட்டாருடன் இணைந்த இயந்திரம் மூலம் மணிக்கு 200 முதல் 250 கிலோவும், 1.5 ஹெச்பி திறன் மோட்டாருடன் கூடிய இயந்திரம் மூலம் மணிக்கு 300 முதல் 350 கிலோவும், 2 ஹெச்பி திறன் மோட்டாருடன் கூடிய இயந்திரம் மூலம் மணிக்கு 500 முதல் 600 கிலோ வரையும் தீவனங்களை நறுக்க முடியும்.

இவற்றின் மூலம் வேலையாள்களின் தேவை, நேரத்தையும் குறைத்து, செலவினங்களையும் கட்டுப்படுத்தலாம் என்றனர்.

## வேளாண் பண்ணையில் ஆட்சியர் ஆய்வு

First Published : 09 Aug 2012 12:58:42 PM IST

புதுக்கோட்டை, ஆக. 8: புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை வேளாண் பண்ணையில் மாட்ட ஆட்சியர் வி. கலைஅரசி அண்மையில் ஆய்வு மேற்கொண்டு, ஆலோசனைகளை வழங்கினார்.

குடுமினான்மலையில் வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்களுக்கு அலுவலக மேலாண்மை மற்றும் கணினி பயிற்சிகள் ஆக. 6-ம் தேதி தொடங்கி, 10-ம் தேதி வரை நடைபெறுகிறது.

இப்பயிற்சி மையத்தைப் பார்வையிட்டு, இளநிலை உதவியாளர், உதவியாளர் மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் பற்றியும், செயல்பாடுகள் குறித்தும் ஆட்சியர் கேட்டறிந்தார்.

மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையத்தில் மத்தியக் கட்டுப்பாட்டு ஆய்வகம், நுண்ணூட்ட ஆய்வு அறை, நொதிக்கலன்கள் அறை, தரக்கட்டுப்பாட்டு அறை, உரங்கள் உற்பத்தி அறை, மண்பரிசோதனை நிலையம், வேளாண்மை நூலகம், காட்சியகம் ஆகியவற்றை பார்வையிட்ட பின்னர், அரசு தோட்டக்கலைப் பண்ணையில் நிலக்கடலை பயிர் செய்திருந்ததையும், தண்ணீர்ப் பாய்ச்சும் கருவியையும் ஆட்சியர் பார்வையிட்டு, திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிரிடப்பட்டுள்ள நெற் பயிர்களைப் பார்வையிட்டார்.

பின்னர், அண்ணா பண்ணையில் விதை சுத்திகரிப்பு நிலையம், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ், ரூ. 5 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள குளிர்சாதன வசதியுள்ள விதை சேமிப்பு கிடங்கைத் திறந்துவைத்தார்.

முன்னதாக, புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையத்தில் வேளாண்மை பட்டயக் கல்லூரி குடுமியான்மலை ஸ்டாமின் பயிற்சி நிலையத்தில் அமைவதற்கான இடத்தை ஆய்வு செய்தார்.

வேளாண்மை இணை இயக்குநர் பி. எம்பெருமாள், ஸ்டாமின் நிலைய இயக்குநர் (பொறுப்பு) எ. ஆர். குணசேகரன், துணை இயக்குநர்கள் ஆர். சதானந்தம், விஜயகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.

## பருவமழை பொய்த்ததால் பாழ்பட்ட மானாவாரிப் பயிர்கள் கணக்கெடுப்பு

First Published : 09 Aug 2012 01:32:57 PM IST

நாமக்கல், ஆக.8: தென்மேற்குப் பருவமழை பெய்த்ததன் காரணமாக நாமக்கல் மாவட்டத்தில் பாழ்பட்ட மானாவாரிப் பயிர்கள் குறித்து மாவட்ட வேளாண்மைத் துறை சார்பில் தீவிரமாக கணக்கெடுப்பு செய்யப்படுகிறது. இந்தக் கணக்கெடுப்பை தொடர்ந்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு நிவாரண உதவிகள் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆண்டுதோறும் ஜூன் 1-ம் தேதி தொடங்க வேண்டிய தென்மேற்குப் பருவமழை 2 மாதங்கள் முடிவடைந்தும் மழை பெய்யவில்லை. இதனால், பருவமழையை நம்பி நாமக்கல் மாவட்டம் முழுவதும் பயிரிடப்பட்ட பாசிப் பயிறு, சோளம், நிலக்கடலை, கரும்பு போன்ற மானாவாரிப்

பயிர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. பல இடங்களில் கரும்புகள் காய்ந்ததை அடுத்து பாதியிலேயே அவைகள் அப்புறப்படுத்தப்பட்டன.

இந்த நிலையில், வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணம் வழங்கக் கோரி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதன்தொடர்ச்சியாக, தற்போது பருவமழை பொய்த்ததால் பாதிக்கப்பட்ட பயிர்கள் குறித்து மாவட்ட வேளாண் இணை இயக்குநர் அலுவலகம் மூலமாக, நாமக்கல் மாவட்டம் முழுவதும் கணக்கெடுப்பு செய்யப்பட்டு வருகிறது. கடந்த சில நாள்களாக நடத்தப்பட்ட இந்தக் கணக்கெடுப்பில் பெருமளவில் பாசிப் பயிறு செடிகள் கருகி வீணாகியிருப்பது தெரியவந்துள்ளது.

இதுகுறித்து, வேளாண்மைத் துறை அலுவலர்கள் கூறியது:

இதுவரை நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் மாவட்டம் முழுவதும் 7,100 ஹெக்டர் நிலப்பரப்பில் பாசிப் பயிறு சாகுபடி செய்யப்பட்டிருந்ததில், மழையில்லாமல் 5,900 ஹெக்டர் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அதேபோல, சுமார் 2,000 ஹெக்டரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த கரும்புப் பயிரில் வெண்ணந்தூர், ராசிபுரம், வலையபட்டி உள்ளிட்ட பகுதிகளில் 300 ஹெக்டர் நாசமாகியுள்ளது. தொடர்ந்து, கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது. முழுமையாக கணக்கெடுப்பு செய்யப்பட்ட பிறகு பாதிக்கப்பட்ட பயிர்களின் சேத மதிப்பு கணக்கிட்டு அரசுக்கு அனுப்பப்படும் என்றனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**வேளாண் இயந்திரங்களுக்கு ஒதுக்கப்படும் மானியம்...குறைப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2012,00:10 IST

திருவள்ளூர்:வேளாண் பொறியியல் துறை மூலம் இயந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ் மாவட்ட வாரியாக விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியம் மற்றும் கருவிகள் குறைக்கப்பட்டு உள்ளன. இதனால், விதைப்பு முதல், அறுவடை வரையிலான பணிகள் பாதிக்கப் படுகின்றன.திருவள்ளூர் மாவட்ட மக்கள் தொகையில், 56 சதவீதம் பேர் விவசாயிகள். நெல், கரும்பு மாவட்டத்தின் முக்கிய பயிர்கள். தொழிற்சாலைகள் அதிகரிப்பு, 100 நாள் வேலை திட்டம் போன்றவற்றால் விவசாயப் பணிகளுக்கு ஆட்கள் கிடைப்பதில்லை.

விதைப்பு - அறுவடை

வேளாண் பொறியியல் துறை, வேளாண்மை இயந்திரமயமாக்கல் திட்டம் மற்றும் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின் கீழ் விவசாயிகளுக்கு இயந்திரங்களை வழங்கி வருகிறது.=

விதைப்பு முதல் அறுவடை வரையிலான பணிகளுக்குத் தேவையான, நெல் நாற்று நடும் கருவி, களை எடுக்கும் கருவி, சுழல் கலப்பை, நெல் அறுவடை இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன.=

சொந்தமாக வாங்கும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.=

வசதியில்லாத சிறு, குறு விவசாயிகளுக்கு, வாடகைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன.=

பற்றாக்குறை

மாவட்டத்தில், வேளாண் பொறியியல் துறைக்கு சொந்தமாக; தரிசு நிலங்களை சமன்படுத்த மண் தள்ளும் இயந்திரம் - நான்கு, உழுவை இயந்திரம் - எட்டு, நெல் அறுவடை இயந்திரம் - இரண்டு, ஆகியவை மட்டுமே உள்ளன. இதனால், வாடகை இயந்திரங்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுகிறது.பல விவசாயிகள், ஆந்திராவில் இருந்து இயந்திரங்களை வரவழைக்க வேண்டி உள்ளது. இதனால், அரசிடம் இருந்து ஒரு மணி நேரத்திற்கு, 1,275 ரூபாய்க்கு கிடைக்கும் நெல் அருவடை இயந்திரத்தை, தனியாரிடம், 2,500 ரூபாய்க்கு எடுக்க வேண்டி உள்ளது.உற்பத்தி செலவு இந்த வகையில் அதிகரித்து, விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அதே போல், மானிய விலையில் ஒதுக்கப்படும் கருவிகளின் எண்ணிக்கையும், ஒதுக்கப்படும் நிதியும் குறைந்து வருகிறது என்ற புகார் உள்ளது.

நிதி குறைப்பு

மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் உள்ள நிலையில், ஒவ்வொரு ஆண்டும், ஒரு சில விவசாயிகள் மட்டும் சொந்தமாக இயந்திரங்கள் வாங்கும் வகையில், சொற்ப தொகையே மானியமாக வழங்கப்படுகிறது.வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தில், 2011-12 நிதி ஆண்டில், பல்வேறு வகையான சிறு இயந்திரங்களுக்கு, 59.25 லட்சம் ரூபாய்மானியமாக ஒதுக்கப் பட்டது, இதில், 242 இயந்திரங்கள் வரை வழங்கலாம் என நிர்ணயிக்கப்பட்டது. இதுவே, 2010-11ல், 82.74 லட்சம் ரூபாய்ஒதுக்கப் பட்டது. அதில், 158 இயந்திரங்கள் வரை வழங்கலாம் என, நிர்ணயிக்கப் பட்டது. அதாவது, மொத்த மானியத் தொகை குறைந்ததோடு, ஒவ்வொரு இயந்திரத்திற்கும் கொடுக்கப்படும் மானியமும் குறைக்கப்பட்டு உள்ளது.

அதே போல், வேளாண்மை இயந்திரமயமாக்கல் திட்டத்தில், உழவு இயந்திரம் போன்ற பெரிய இயந்திரங்களுக்கு, 2011-12ல், 62 இயந்திரங்கள் வழங்கும் வகையில், 25.38 லட்சம் ரூபாய்மானியமாக ஒதுக்கப் பட்டது. இதுவே, 2010-11ல், 96 இயந்திரங்கள் வழங்கும் வகையில், 39.16 லட்சம் ரூபாய்மானியமாக ஒதுக்கப் பட்டது. (மேலும் விவரங்களுக்கு, தகவல் பெட்டியை பார்க்கவும்)

பரிந்துரை

அடுத்த ஆண்டிற்கான, நிதி கோரிக்கை இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் வைக்கப் படும். இதை

முன்னிட்டு விவசாய சங்கங்கள், வேளாண் பொறியியல் துறையிடம் தங்கள் கருத்துக்களை தெரிவித்தால், அடுத்த நிதி ஆண்டில் மானியம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.இது குறித்து, பெயர் வெளியிட விரும்பாத வேளாண்மைப் பொறியியல் துறை அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, ""வேளாண் கருவிகள் மற்றும், அதற்கான மானியத்தை மத்திய, மாநில அரசுகள் வழங்குகின்றன. விவசாயிகள் அதிகம் கொண்ட இம்மாவட்டத்திற்கு கருவிகளின் தேவை அதிகமாக உள்ளது. கூடுதல் இயந்திரங்கள் வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கையினை அரசுக்கு தெரியப்படுத்துவோம்," என்றார்.இயந்திரங்கள் ஒதுக்கீடு விவரம்வேளாண்மை இயந்திரமயமாக்கல் திட்டம்

டிராக்டர் 12 5.40 20 9.00 16 7.20
பவர் டில்லர் 30 13.42 60 26.96 36 16.18
சுழற்கலப்பை 3 0.60 16 3.20 10 2.00

மொத்தம் 45 19.42 96 39.16 62 25.38

தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம்

களையெடுக்கும் கருவி 4 1.50 22 4.77 34 8.13
சிறிய டிராக்டர் 3 3.75 21 26.25 25 26.60
சக்தி வாய்ந்த தெளிப்பான் 1 0.10 2 0.33 2 0.46
பெரிய நெல் நடவு இயந்திரம் 1 4.00 1 4.00 2 8.00
பண்ணைக் கருவிகள் 15 0.70 53 1.55 158 3.39
பவர் டில்லர் 10 4.50 5 2.25 5 2.25
சுழற்கலப்பை 51 10.20 8 1.60 8 1.60
நெல் நடவு இயந்திரம் 5 20.00 7 28.00 3 12.00
தோட்டக்கலை கருவிகள் - - 1 0.25 2 0.52
வங்கிகள் மூலம் கருவிகள் - - 38 13.74 - -
விதை உற்பத்தி செய்யும் தட்டு 97 8.75 - - 3 0.30

மொத்தம் 187 53.50 158 82.74 242 63.25

### ஆடிப்பட்ட துவரை சாகுபடி செய்து பயன்பெற வேளாண் அதிகாரி தகவல்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2012,23:42 IST

கருத்தை பதிவு செய்ய

திருக்கோவிலூர்: ஆடிப்பட்டத்தில் துவரை சாகுபடி செய்து பயன்பெற வேளாண் அதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

முகையூர் ஒன்றியம் சித்தாத்தூரில், துவரை மற்றும் கரும்பில் அதிக மகசூல் பெற மேற்கொள்ள வேண்டிய நாற்றங்கால் பயிர் முறை குறித்து வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு செயல் விளக்க பயிற்சி அளிக்கப்பட்டது.

ஊராட்சி தலைவர் தண்டபாணி தலைமை தாங்கினார். மெட்ராஸ் சுகர்ஸ் கரும்பு ஆலோசகர் பாண்டியன், கரும்பு அலுவலர் சசிகுமார், வேளாண்மை பொறியியல் துறை இளநிலை பொறியாளர் ராஜசேகரன் முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை உதவி இயக்குனர் கென்னடிஜெயக்குமார் விளக்கி பேசியதாவது:

தற்போதய ஆடிப்பட்டம் துவரை சாகுபடிக்கு உகந்தது. துவரை நாற்றுகளை நிழல் வலையில் வளர்த்து, 21வது நாள், சிறு குழிகள் எடுத்து அதில் தொழுஉரம் மற்றும் அடி உரமாக ஏக்கருக்கு 100 கிலோ சூப்பர் பாஸ்பேட், 25 கிலோ யூரியா, 20 கிலோ பொட்டேஷ் இட்டு நடவு செய்ய வேண்டும்.

பூக்கும்போது, 2 சதவீதம் டி.ஏ.பி., யூரியா கரைசல்களை தெளிக்க வேண்டும். இதன் மூலம் துவரை சாகுபடியில் லாபம் பெறமுடியும்.

இதற்காக அரசு எக்டேர் ஒன்றுக்கு, தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் 5000 ரூபாய்க்கு தரமான விதை, உரம், நோய் தடுப்பு மருந்துகளை வழங்குகிறது. விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண் அலுவலர்களிடம் பதிவு செய்து பயன் பெறலாம் என கூறினார்.

துணை வேளாண்மை அலுவலர் புகழேந்தி, உதவி வேளாண்மை அலு வலர் கிருஷ்ணன் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

### விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கல்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2012,03:47 IST

ஆத்தூர்: ஆத்தூர் அருகே, வேளாண்மைத்துறை மூலம், விவசாய கழிவுகளில் இருந்து மண்புழு உரம் தயார் செய்வது குறித்து, விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.ஆத்தூர் அருகே, கல்பகனூர் கிராமத்தில், வேளாண்த்துறை மூலம் விவசாய கழிவுகளில் இருந்து, மண்புழு உரம் தயார் செய்வது குறித்து, பயிற்சி முகாம் உதவி இயக்குனர் ஏழுமலை தலைமையில்

நடந்தது.இதில், வேளாண் அலுவலர்கள் சக்கரவர்த்தி, ஜானகி ஆகியோர், விவசாய கழிவுகளில் இருந்து, மண்புழு உரம் தயார் செய்வது குறித்து, செயல் விளக்கம், அரசு மானிய திட்டங்கள் மற்றும் மண்புழு உரங்களின் பயன்கள் குறித்து, எடுத்துரைத்தனர்.முகாமில், கல்பகனூர் பஞ்சாயத்து துணை தலைவர் சுப்ரமணி, உதவி வேளாண்மை அலுவலர்கள் லலிதாபார்த்திபா, முத்தரசன், விவசாயிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## இயற்கை வேளாண் பயிற்சி

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2012,03:28 IST

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 16ம் தேதி, இயற்கை வேளாண்மை குறித்து ஒரு இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது' என, ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 16ம் தேதி, இயற்கை வேளாண்மை எனும் தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி நடக்க உள்ளது. பயிற்சியில், இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம், இயற்கை சாகுபடி தொழில்நுட்பங்கள், இயற்கை உரம் தயாரித்தல், இயற்கை முறையில் பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு முறை உள்ளிட்டவை குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில், விவசாயிகள் உட்பட அனைத்து தரப்பினரும் பங்கேற்கலாம். விருப்பமுள்ளோர், நாமக்கல்-மோகனூர் சாலையில் உள்ள கால்நடை மருத்துவ அறிவியல் நிலைய வளாகத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 15ம் தேதிக்குள், நேரில் வந்தோ அல்லது, 04286- 266345 என்ற ஃபோன் எண் மூலமாகவோ தொடர்பு கொண்டு பெயர் பதிவு செய்துகொள்ள வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பார்த்தீனியம் செடியை கட்டுப்படுத்தும் உப்பு

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2012,03:01 IST

காங்கேயம்: ""காங்கேயம் பகுதியில் அதிகளவு களைச் செடிகளாக முளைத்துள்ள பார்த்தீனியம் களை செடிகளை, சாதாரண உப்புக்கரைசலை தெளித்து கட்டுப்படுத்த வேண்டும்'' என, வேளாண் உதவி இயக்குனர் அரசப்பன் கேட்டுக்கொண்டுள்ளார்.அவர் கூறியதாவது: வறட்சிக்கு இலக்கான காங்கேயம் பகுதியில், பார்த்தீனியம் களைச் செடி அதிகளவு வளர்ந்துள்ளது. மனிதனுக்கும், விலங்குகளுக்கும் பெரும் தீங்கு விளைவிக்கக்கூடியது. இயற்கையில் இச்செடிகளுக்கு எதிரிகள் இல்லாததால், இனப்பெருக்கம் அதிகரித்து வருகிறது. கால்நடைகள் இச்செடிகளை

விரும்புவதில்லை. இலைகளில் நச்சுத்தன்மையுடையது. அனைத்து பருவத்திலும், நன்கு வளரும் சக்தியுடையது.மனிதனுக்கு ஆஸ்துமா, தொழு நோயை ஏற்படுத்தும். விலங்குகளுக்கும் தீங்கு விளைவிக்கும். இவற்றை கட்டுப்படுத்த, 200 கிராம் சாதாரண உப்பை, ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தால், கட்டுப்படுத்த முடியும்.

### விவசாயிகளுக்கான இடுபொருள் வழங்கல்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2012,20:58 IST

குஜிலியம்பாறை : வேளாண்மைதுறை சார்பில் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் மற்றும் உரிய இடு பொருட்களை மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கும் விழா குஜிலியம்பாறையில் நடந்தது.

பழனிசாமி எம்.எல்.ஏ., தலைமை வகித்தார். பாளையம் பேரூராட்சி தலைவர் பெருமாள் முன்னிலை வகித்தார்.

ஊராட்சி ஒன்றிய துணை தலைவர் நல்லசாமி, வேளாண்துறை அலுவலர் குமார், உதவி வேளாண் மை அலுவலர்கள் தண்டபாணி, சந்திரன், ராமச்சந்திரன், பிரியா, ரவிச்சந்திரன் பங்கேற்றனர்.

### விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2012,20:58 IST

தாண்டிக்குடி : தாண்டிக்குடியில் மழை நீடிக்கிறது.

வறண்ட வானிலை நீடித்த தாண்டிக்குடி, பண்ணைக்காடு, தடியன்குடிசை பகுதியில் மழை பெய்வதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து நடவு பணியை துரிதப்படுத்தியுள்ளனர்.

### விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2012,20:58 IST

கொடைக்கானல் : கொடைக்கானல் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தில், ஆத்மா திட்டம், குறித்து விவசாயிகளுக்கு பயிற்சிமுகாம் நடந்தது. இணைஇயக்குனர் ராஜா முகம்மது தலைமை வகித்தார்.

உதவி இயக்குனர் சின்ராஜ் முன்னிலை வகித்தார்.
விவசாயிகள் புதிய தொழில்நுட்பத்தை கையாள்வது குறித்து விளக்கம் தரப்பட்டது.

## காய்கறி விதைகள் வழங்கும் முகாம்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2012,20:59 IST

சிவகங்கை : சிவகங்கை அருகே இடையமேலூரில் காய்கறி விதைகள் மானியத்தில் வழங்கும் முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் சுகந்தி முனியாண்டி தலைமை வகித்தார். தோட்டக்கலை துணை அலுவலர் பிச்சைமணி வரவேற்றார். தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ரேவதி திட்டங்கள் குறித்து பேசினார். 50க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் காய்கறி, செடி வகை விதைகள் வழங்கப்பட்டன. உதவி விவசாய அலுவலர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

## வெண்டை பயிரில் காய்ப்புழு தாக்குதல் நெல்லை மாவட்ட விவசாயிகள் கவலை

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2012,02:58 IST

திருநெல்வேலி: நெல்லை மாவட்டத்தில் வெண்டை பயிரில் காய்ப்புழு தாக்குதல் காணப்படுவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
நெல்லை மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை பொய்த்துவிட்டதால் விவசாயிகள் கிணற்று நீரை பயன்படுத்தி காய்கறிகள் சாகுபடி செய்துள்ளனர். சுரண்டை, ஆலங்குளம், இடைகால், கடையம் உள்ளிட்ட பகுதிகளில் வெண்டை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வெண்டை பயிரில் காய்ப்புழு தாக்குதல் உள்ளது. அதிக வெப்பநிலை, காற்றில் அதிக ஈரப்பதம் உள்ள தற்போதைய சூழ்நிலையில் காய்ப்புழு தாக்குதல் அதிகரித்தவண்ணம் உள்ளது.
இளம்புழுக்கள் தண்டை துளையிட்டு கீழ்நோக்கி சென்று உள்ளே இருக்கும் திசுக்களை சாப்பிட்டு வருகிறது. இதனால் பாதிக்கப்பட்ட தண்டு வாடி காய்ந்து விடுகிறது. பூ மொட்டுகள், பூக்கள், காய்களையும் புழுக்கள் துளையிட்டு சதைப்பற்றுள்ள பகுதி, விதைகளை உண்ணுகிறது.
தண்டு, காய்களில் உள்ள துளை புழுக்களின் எச்சத்தால் நிரப்பப்பட்டுள்ளது. புழுக்களால் தாக்கப்படும் காய்கள் வளைந்து காணப்படுகின்றன. இந்த காய்களை சமையலுக்கு பயன்படுத்த முடியாது. காய்ப்புழு தாக்குதலுக்கு உள்ளான பூக்கள், காய்கள் உதிர்ந்துவிடுவதால் மகசூல் இழப்பு, பணநஷ்டம் ஏற்படுகிறது என விவசாயிகள் கவலையுடன் கூறுகின்றனர்.
கட்டுப்படுத்தும் விதம்
இதுகுறித்து அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் (பூச்சியியல் துறை)

இளஞ்செழியன் கூறும்போது, ""காய்ப்புழுவால் தாக்கப்பட்ட தண்டு, பூ மொட்டுகள், பூக்கள், காய்களை பறித்து அழிக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 12 இனக்கவர்ச்சி பொறிகளை அமைத்து அந்துப்பூச்சியை கவர்ந்து அழிக்கலாம். முட்டை ஒட்டுண்ணி டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் ஒரு ஹெக்டேருக்கு ஒரு லட்சம் என்ற அளவில் 15 நாட்கள் இடைவெளியில் 3 முறை விட்டு பூச்சியை கட்டுப்படுத்தலாம்.
பச்சை கண்ணாடி இறக்கைப்பூச்சி என்ற இரை விழுங்கியை ஒரு ஹெக்டேருக்கு 10 ஆயிரம் என்ற எண்ணிக்கையில் வயலில் விட்டு கட்டுப்படுத்தலாம். பூ பூக்கும் பருவத்தில் வேப்பங்கொட்டை சாறு 5 சதவீதம் அல்லது கார்பரில் 2 கிராம் அல்லது மோனோகுரோட்டோபாஸ் 2 மி.லி., அல்லது புரபனோபாஸ் 2 மி.லி., மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து காலை, மலையில் கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கலாம். செயற்கை பைரித்ராய்டு மருந்து தெளிப்பதை தவிர்க்க வேண்டும். இவை மூலம் அஸ்வினி, செம்பேன் உள்ளிட்ட பூச்சிகளின் மறுஉற்பத்தித்திறன் அதிகரிக்க வாய்ப்பள்ளது" என்றார்.

## சொட்டுநீர் மூலம் மரக்கன்றுகள் நடும் திட்டம் துவக்கம்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2012,02:11 IST

சாத்தான்குளம்: சாத்தான்குளம் யூனியனில் உள்ள கிராம பஞ்.,களில் சொட்டு நீர் மூலம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை பஞ்.,தலைவர்கள் செய்து வருகின்றனர்.
சுற்றுப்புறச்சூழல் மாசு அடைதலைத் தடுக்கவும், காற்றில் உள்ள மாசுக்களை நீக்கவும், மழை பெறவும் மரம் நடுவது அவசியம் என அரசு பிரச்சாரம் செய்தாலும் பல இடங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டாலும் பராமரிப்பின்றி பல மரக்கன்றுகள் காய்ந்து வருகின்றதாகவும் இதைத் தடுப்பதற்காக சுப்பாராயர்புரம் பஞ்.,தலைவர் சுயம்புத்துரை தனது பஞ்.,ரோடு கரைகளில் இருபுறமும் மரக்கன்றுகள் நட்டி அதற்கு வேலி அமைத்து சொட்டுநீர் பாசனமும் அமைத்தார். இதனால் சுப்பாராயர்புரம் பஞ்.,ரோட்டின் இருபுறமும் மரக்கன்றுகள் நன்கு வளர்த்து வருகின்றன. அதனைத் தொடர்ந்து நடுவக்குறிச்சி பஞ்.,தலைவர் சொட்டுநீர் மூலம் மரக்கன்றுகள் திட்டத்தை துவங்கியுள்ளனர். சாஸ்தாவிநல்லூர் பஞ்.,தலைவர் ஜார்ஜ் விரைவில் துவங்க உள்ளார். சாத்தான்குளம் ஒன்றியம் சுப்பாராயர்புரம் பஞ்.,வழி காட்டியுள்ளது. இதை பிற பஞ்.,களும் செய்தால் நாடு செழிக்கும்.

---

நலிவடையும் இறால் பண்ணை தொழில்

பதிவு செய்த நேரம்:2012-08-09 12:15:49

மரக்காணம், : மரக்காணம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளான புதுப்பாக்கம், வண்டிப்பாளையம், தேவிகுளம், காளியாங்குப்பம் உள்ளிட்ட பகுதிகளில் 500க்கும் மேற்பட்ட இறால் பண்ணைகள் உள்ளன. இந்த இறால் பண்ணைகளை நம்பி சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கூலி தொழிலாளர்கள் உள்ளனர். மரக்காணம் பகுதியில் கடற்கரையோரம் உள்ள இறால் குஞ்சு பொறிப்பகங்களில் இருந்து மிக சிறிய இறால் குஞ்சுகளை வாங்கி வந்து அவற்றை பெரிய அளவில் அமைக்கப்பட்ட குட்டைகளில் விட்டு வளர்க்கப்படுகிறது.

இதுபோல் வளர்க்கப்படும் இறால்கள் 120 முதல் 130 நாட்களில் வளர்ந்து பெரிதானவுடன் ஜப்பான், நியூசிலாந்து போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதன் மூலம் ஆண்டுதோறும் பல கோடி ரூபாய் அன்னிய செலாவணி கிடைக்கிறது.

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்பாக நடைபெற்று வந்த இறால் வளர்ப்பு தற்போது விலை வீழ்ச்சி, மர்ம நோய் தாக்குதல் போன்ற காரணங்களால் அழியும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து இறால் பண்ணை உரிமையாளர் சேது கூறுகையில், தற்போது வளர்ப்பு இறால்களின் விலை வீழ்ச்சி அடைந்து ஒரு கிலோ ரூ. 190 முதல் ரூ. 250 வரை விற்பனையாகிறது. ஆனால் இறால் வளர்க்க பயன்படுத்தும் தீவனங்களின் விலை பல மடங்கு உயர்ந்துவிட்டது.

தற்போது தமிழக அரசு மின்சார கட்டணத்தை உயர்த்தியுள்ளது. இதேபோல் டீசல், ஆள் கூலியும் அதிகரித்து விட்டது. இதனால் இறால் பண்ணை உரிமையாளர்கள் நஷ்டம் அடைந்து பாதிக்கப்பட்டு வருகின்றனர். பலர் தொழிலை விட்டு ஒதுங்கிவிட்டனர்.

ஆயிரக்கணக்கான கூலி தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே இறால் பண்ணை உரிமையாளர்கள் மற்றும் கூலித்தொழிலாளர் நலன்கருதி இறால் வளர்க்க அரசு மானியத்துடன் கடன் வழங்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வன விளைச்சல் வறட்சியால் சரிவு

பதிவு செய்த நேரம்:2012-08-09 10:18:55

கோவை, : கோவை வனத்தில் நடப்பாண்டில் சிறு வன மகசூல் 50 சதவீதம் குறைந்து விட்டது. கோவை வனக்கோட்டத்தில் கோவை, போளுவாம்பட்டி, பெரியநாயக்கன்பாளையம், காரமடை, மேட்டுப்பாளையம், சிறுமு கை வனசரகங்கள் அமைந்துள்ளது. வனத்தில் கடுக்கய், நெல்லிக்காய், தேன், ஈச்சம்புல், வெட்டிவேர், சாம்பிராணி பட்டை, லவங்க பட்டை உள்ளிட்ட வன விளை பொருட்கள் சேகரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வனத்துறையின் அனுமதி பெற்ற கிராம வன குழுவினர் மட்டுமே வனத்திற்கு சென்று இந்த சிறு வன பொருட்களை சேகரித்து வருகின்றனர். கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் இருந்து இதுவரை வனப்பகுதியில் மழை மிக குறைவாகவே பெய்துள்ளது. இதனால் ஈச்சம்புல் காடு காய்ந்து விட்டது. பல இடங்களில் ஈச்சம்புல் வளரவில்லை. ஈச்சம்புல் மூலமாக துடைப் பம் தயாரிக்கப்படுகிறது. ஈச்சம்புல் கிடைக்காததால் வன குழுவினர் ஏமாற்றமடைந்துள்ளனர். மேலும் கடுக்காய், நெல்லிக்காய் உள்ளிட்ட சிறு வன பொருட்களிலும் போதுமான மகசூல் கிடை க்கவில்லை. சிறுவன மகசூ ல் 50 சதவீதம் வரை குறை ந்து விட்டது. சிறுவன மகசூல் நேரிடையாக விற்ப னை செய்யப்படுகிறது. ஊறுகாய், ஜாம், ஜெல்லி, பக்தி பொருட்கள், குழந்தைகளுக்கான பொருட்களும் தயாரிக்கப்படுகிறது. வன விளைச்சல் குறைந்து விட்ட தால், மலை கிராமத்தினர் ஏமாற்றமடைந்துள்ளனர்.

## ஒட்டன்சத்திரம் பகுதியில் கடும் வறட்சி காய்கறிகள் விலை கடுமையாக உயரும்?

பதிவு செய்த நேரம்:2012-08-09 11:56:13

ஒட்டன்சத்திரம், : ஒட்டன்சத்திரம் பகுதியில் பருவமழை சரிவர பெய்யாததால் விவசாயம் கேள்விக்குறியாகிவிட்டது. இதே நிலை தொடர்ந்தால் காய்கறிகள் விலை கடுமையாக உயரும் என அஞ்சப்படுகிறது.

ஒட்டன்சத்திரம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. இப்பகுதியில் சின்னவெங்காயம், பீன்ஸ், கத்தரி, தக்காளி, சம்பா மிளகாய் போன்றவை பயிரிடப்படுகின்றன. இங்கு விளைவிக்கப்படும் காய்கறிகள், ஒட்டன்சத்திரம் காந்தி காய்கறி மார்க்கெட்டிற்கு அனுப்பப்படுகின்றன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மார்க்கெட்டிற்கு காய்கறிகள் கொண்டு வரப்படுகின்றன. ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் இருந்து கேரளாவிற்கு அதிகளவில் காய்கறிகள் அனுப்பப்படுகின்றன. தினமும் ரூ.4 கோடி முதல் 5 கோடி வரை இங்கு வர்த்தகம் நடக்கிறது.

ஆனால், இந்தாண்டு பருவமழை சரிவர பெய்யாததால் ஒட்டன்சத்திரம் பகுதியில் விவசாயம்

சரிவர நடக்கவில்லை. பருவமழையை எதிர்பார்த்து, தங்களது நிலங்களை உழவு செய்து பாத்தி கட்டி தயார்படுத்திய விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளது.
ஒட்டன்சத்திரம் பகுதி பாசனத்திற்கு முக்கிய நீர் ஆதாரமாக பரப்பளாறு அணை உள்ளது. அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் பெருமாள்குளம், முத்துப்பூபாலசமுத்திரகுளம், சடையகுளம், செங்குளம், ராமசமுத்திரகுளம், ஜவ்வாதுபட்டிபெரியகுளம் ஆகிய குளங்களுக்கு செல்லும். இதன்மூலம் குளத்து பாசனத்தை பயன்படுத்தி 2 ஆயிரத்த 223 ஏக்கர் நிலங்களில் பாசனம் நடந்து வந்தது. ஆற்று பாசனம் மூலம் 3 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயன் பெற்று வந்தன.
பருவமழை தவறியதால் 90 அடி கொண்ட பரப்பளாறு அணையின் நீர்மட்டம் 65 அடியாக குறைந்துள்ளது. ஒட்டன்சத்திரம் குடிநீர் தேவைக்காக தினமும் 5 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. மழை பெய்யாவிட்டால் ஒட்டன்சத்திரம் பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் நிலவுகிறது.
ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் காய்கறி விவசாயத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் துவக்காவிட்டால் காய்கறிகள் விலை கடுமையாக உயரக்கூடும்.
கிராமப்புறங்களிலும் நிலத்தடிநீர் மட்டம் பாதித்து குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

## தூத்துக்குடி, நெல்லை மாவட்டங்களில் கோழிப்பண்ணை அமைக்க 50% மானியம்

பதிவு செய்த நேரம்:2012-08-09 11:45:52

தூத்துக்குடி, : தூத்துக்குடி, நெல்லை மாவட்டங்களில் கோழிப்பண்ணை அமைக்க அரசு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.
கோழிப்பண்ணை தொழிலை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அரசு கோழி வளர்ப்புத் திட்டத்தை செயல்படுத்த உத்தரவிட்டுள்ளது. இதன்படி கறிக்கோழி, முட்டைக்கோழி, நாட்டுக்கோழி பண்ணைகள் அமைக்க விருப்பமுள்ளவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் கொட்டகைகள் அமைப்பதற்கான செலவில் 25 சதவீதம் மானியமாக வழங்கப்படும். மேலும் நபார்டு வங்கியின் கோழி துணிகர முதலீட்டு நிதியில் இருந்தும் 25 சதவீதம் மானியம் வழங்கப்படும்.
வருடம் முழுவதும் நாட்டுக் கோழி வளர்க்க விவசாயிகளை ஊக்கப்படுத்துவதற்காக 2ம் தொகுப்பு கோழி குஞ்சுகள் வாங்கும் செலவில் 50 சதவீதமும் 3ம் தொகுப்பு கோழிக்குஞ்சுகள் வாங்கும் செலவில் 30 சதவீதமும் மானியம் வழங்கப்படும். மானியத்துடன் கறிக்கோழி, முட்டை கோழி பண்ணைகள் அமைக்க நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர், உள்ளிட்ட மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

விவசாயிகள் தனிநபர் தொழில் முனைவோர், சுயஉதவிக்குழுக்கள் தொழில் தொடங்க போதிய நிலம் தங்கள் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் பெயரிலோ இருக்க வேண்டும். கோழிப்பண்ணையை விரிவாக்கம் செய்ய ஆர்வம் உள்ளவர்களும் பயன்பெறலாம். தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு 5 நாள் பயிற்சி அளிக்கப்படும். தகுதியும் ஆர்வமும் உள்ளவர்கள் கலெக்டரால் அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைப்பாளரின் கடிதம் மற்றும் கலெக்டரால் தேர்வு செய்யப்பட்ட வங்கியிலிருந்து ஒப்புதல் கடிதம் அல்லது சொந்த நிதிக்கான சான்றுடன் விண்ணப்பங்களை அந்தந்த மாவட்ட கலெக்டரிடம் வழங்கலாம் என்று அரசு உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## தரமான விதையை விற்பனை செய்ய வேண்டும் துணை இயக்குனர் அறிவுறுத்தல்

பதிவு செய்த நேரம்:2012-08-09 11:02:48

சேலம், : தரமான விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும் என்று சேலம் விதை ஆய்வு துணை இயக்குனர் சவுந்தரராஜன் கூறியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:

விதை விற்பனை நிலையங்களில் விதை விற்பனை உரிமத்தை விவசாயிகளின் பார்வைக்கு தெரியும்படி வைக்க வேண்டும். ஒரு தகவல் பலகையை வைத்து, அதில் என்னென்ன விதைகள் விற்பனைக்காக உள்ளது, அவற்றின் பெயர், ரகம், குவியல் எண், இருப்பு அளவு மற்றும் விலை ஆகிய விவரங்களை நாளது தேதிவரை எழுதி வைக்க வேண்டும்.

விவசாயிகள் விதைகள் வாங்கும்போது, அவசியம் விற்பனை பட்டியல் வழங்கப்பட வேண்டும். அப்பட்டியலில் விதைகள் வாங்கும் விவசாயின் பெயர், தந்தை பெயர், முகவரி, விதையின் பெயர், பயிர், ரகம், நிலை, வாங்கிய அளவு, குவியல் எண், காலாவதி தேதி ஆகிய விபரங்கள் அவசியம் குறிப்பிடப்பட வேண்டும். மேலும் அப்பட்டியலில் வாங்குபவரின் (விவசாயி) கையொ ப்பம் இருப்பது மிகவும் அவசியமாகும். இருப்பில் உள்ள விதைக் குவியல்களை ரகம் வாரியாக, குவியல் வாரியாக அடுக்கி வைக்க வேண்டும்.

பதிவேட்டில் விதைக் குவியல்களை இருப்பு வைக்கும்போது, விதைகள் எங்கிருந்து வாங்கப்பட்டது. என்ற விபரத்தையும், பயிர் வாரியாக, ரகம் வாரியாக, நிலை வாரியாக, கொள்கலன் வாரியாக இருப்பு வைத்து பராமரிக்க வேண்டும். விவரங்கள் குறைபாடு உள்ள விபர அட்டைகள் அடங்கிய விதைப்பைகளை விற்பனைக்கு வைக்கக்கூடாது. காலாவதியான விதைக் குவியல்களை விற்பனைக்கு வைக்கக்கூடாது. இருப்பில் உள்ள விதைகள் காலாவதியாகிவிட்டால் தனிப்பதிவேட்டில் பதிவு செய்து விற்பனைக்கு அல்லாது தனியாக வைக்க வேண்டும்.

நல்ல முளைப்புத்திறனுடன் தேவையான பயிர் எண்ணிக்கை தந்து, சீரான வளர்ச்சியுடன் ஒரே சமயத்தில் பூத்து, முதிர்ந்து, ஒரே நேரத்தில் அறுவடை செய்ய ஏதுவாக, கலப்பிடமில்லாமல், அதிக மகசூல் தரக்கூடிய தரமான விதை களை விவசாயிகளுக்கு விற்பனை செய்து வேளாண் உற்பத்திக்கு உறுதுணையாக செயல்பட அனைத்து விதை விற்பனையாளர்களையும் சேலம் விதை ஆய்வு துணை இயக்குனர் சவுந்தரராஜன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## மாவட்டம் முழுவதும் பரவலாக மழை விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நேரம்:2012-08-09 10:56:48

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் நேற்று பரவலாக மழை பெய்தது. புதுக்கோட்டை மாவட்டத்தில் பருவ மழை பொய்த்து போனதால் குளங்கள், ஏரிகள் வறண் டன. கடும் வறட்சியால் மாவட்டம் முழுவதும் அனல் காற்று வீசி வந்தது. இந்நிலையில் புதுகை நகர்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு லேசான தூறல் மழை பெய்தது. நேற்று பகல் முழு வதும் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. மாலை 6 மணியளவில் திடீரென கருமேகங்கள் திரண்டு குளிர்ந்து காற்று வீசியது. இரவு 8 மணிக்கு மழை பெய்ய தொடங்கியது. தொடர்ந்து பெய்த கனத்த மழையால் நகரின் பல்வேறு இடங்களில் சாலைகளில் மழைநீர் வெள்ளம் போல கரைபுரண்டு ஓடியது. திடீர் மழையால் வெப்பம் தணிந்து பூமி குளிர்ந்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.
இதேபோல திருமயத்திலும் இரவு 7.15 மணிக்கு பலத்த மழை பெய்தது. தொடர்ந்து இரவு 8.30 மணி வரை பெய்த பலத்த மழையினால் மழைநீர் தாழ்வான பகுதியை நோக்கி ஓடியது. இதே போல் அறந்தாங்கி, இலுப்பூர், அன்னவாசல், விராலிமலை பகுதிகளில் லேசான மழை பெய்தது. மாவட்டத்தில் பெய்துள்ள இந்த திடீர் மழையினால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## பயிரை காப்பாற்ற மறுகடன் பெற முடியாமல் கரும்பு விவசாயிகள் தவிப்பு நிலுவைத் தொகையை வழங்க வலியுறுத்தல்

பதிவு செய்த நேரம்:2012-08-09 10:35:00

மயிலாடுதுறை: கூட்டுறவு சர்க்கரை ஆலை நிலுவை தொகை வழங்காததால், கடனை செலுத்தி பயிரை காப்பாற்ற மறுகடன் பெற முடியாமல் கரும்பு விவசாயிகள் தவித்து வருகின்றனர். நாகை மாவட்டம் மயிலாடுதுறை அடுத்த தலைஞாயிறு கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 8,600

ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் தொ டக்க வேளாண் கூட்டுறவு வங்கி மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடம் விவசாய கடன் பெற்றே கரும்பு விவசாயம் செய்து வருகின்றனர். இவர்களுக்கு ரூ.22 கோடி ஆலை நிர்வாகம் வழங்கவேண்டும்.

தற்போது ஆலை நிர்வாகம் நிலுவைத்தொகை வழங்காததால், ஒருமுறை நடவு செய்து 3 முதல் 5 ஆண்டுகள் வரை பலன் தரக்கூடிய கரும்பை காப்பாற்ற மறுகடன் பெறமுடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். இதுகுறித்து தலைஞாயிறு கரும்பு விவசாயி நடராஜன் கூறியதாவது: 'கரும்பு விவசாயத்திற்கு கடன் வாங்கினால் 14 மாதத்திற்குள் திரும்ப செலுத்தினால் வட்டி கிடையாது. நெல் விவசாயத்திற்கு வாங்கிய கடனை 12 மாதத்திற்குள் திரும்ப செலுத்திவிட்டால் வட்டியில்லை. குறிப்பிட்ட காலத்தைத் தாண்டியும் கடன் கட்டவில்லை என்றால் அதற்கு 7% வட்டிசேர்த்து வங்கிகள் வசூல் செய்து விடுகிறது.

தலைஞாயிறு கூட்டுறவு சர்க்கரை ஆலையின் அரவை கடந்த ஜனவரியில் துவங்கி, 2.25 லட்சம் டன் கரும்பு அறுவடை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அரவையின்போது தொழிலாளர்கள் போராட்டத்தால் அரவை நடைபெறவில்லை. இதனால், 15 ஆயிரம் டன் கரும்பு தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பப்பட்டது.

பின்னர் தொழிலாளர்கள் பிரச்னை தீர்க்கப்பட்டு வேலைக்குத் திரும்பினர். இந்த ஆலையில் 1.50 லட்சம் டன் மட்டுமே கரும்பு அரவை ஆனது. இதில், 16.3.12 முதல் 16.6.12வரை 88 ஆயிரம் டன் கரும்புக்கு ரூ.19 கோடியும், தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பியதற்கு ரூ.3 கோடி என மொத்தம் ரூ.22 கோடியை ஆலை நிர்வாகம் வழங்காமல் வைத்துள்ளது.

கரும்பு கடனுக்கான காலம் 14 மாதம் முடிந்தும் நிலுவைத்தொகை வழங்கப்படாததால் விவசாயிகள் வாங்கிய கடனுக்கு தற் போது வட்டி செலுத்தவேண்டும். வங்கிகள் கடனை கட்டுமாறு வற்புறுத்தி வருகின்றன. மேலும் கரும்பு பயிரை காப்பாற்ற மறுகடன் கொடுக்கவும் மறுக்கிறது. மின் தட்டுப்பாடு, தண்ணீர் பற்றாக்குறை, இவற்றுடன் விவசாயக் கடன் கட்டவுமில்லை, மறுகடன் கிடைக்காததால் பயிரைக் காப் பாற்ற முடியாமல் தவித்து வருகிறோம்.

கூட்டுறவு சர்க்கரை ஆலை விதிப்படி கரும்பு வெட்டி அனுப்பிய 14 நாளில் அதற்குரிய தொகை யை வழங்கவேண்டும். இல்லையெனில் 14 சதவீத வட்டி சேர்த்து வழங்கவேண்டும்.

எங்கள் குழந்தைகளுக்கு பள்ளி, கல்லூரி கட்டணம் கூட செலுத்த முடியாமல் உள்ளோம். இதுகுறித்து கலெக்டர், சர்க்கரைத்துறை ஆணையருக்கு தெரிவித்தும் எந்த பதிலும் இல்லை. ஆண்டுதோறும் இதுபோல் தாமதமாகவே அரசு தொகையை வழங்குகிறது. உடனடியாக கரும்பு நிலுவைத்தொகையை வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு நடராஜன் கூறினார்.

நாகையில் நாட்டு கோழி பண்ணை அமைக்க மானியம் விவசாயிகளுக்கு அழைப்பு

பதிவு செய்த நேரம்:2012-08-09 10:33:56

நாகை: நாகையில் நாட்டுக்கோழி பண்ணை அமைக்க மானியம் வழங்கப்படுவதாக கலெக்டர் முனுசாமி தெரிவித்தார்.

இதுபற்றி அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

நாகை மாவட்டத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பை மேம்படுத்தும் வகையில் நாட்டுக்கோழிப் பண்ணைகள் அமைக்கப்பட உள்ளன. இத்திட்டத்தின் கீழ் தலா ரூ.1.17 லட்சம் வீதம் 35 பயனாளிகளுக்கு நிதி வழங்கப்படும். இதில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்படும்.

இத்திட்டத்தில் கோழிக் கொட்டகை அமைக்கவும், குஞ்சு, தீவனம் மற்றும் உபகரணங்கள் வாங்க முதல் தவணையாக 25 சதவீத மானியத்தொகை ரூ.29,250 மாநில அரசால் வழங்கப்படும். இத்திட்டத்தின் இறுதியில் 25 சதவீத மானியத்தொகை (ஆதிதிராவிடர்களுக்கு 33 சதவீத மானியத்தொகை) நபார்டு வங்கி மூலம் வழங்கப்படும்.

முதல் தவணை கோழிக்குஞ்சுகள் 100 சதவீத மானியத்திலும், 2வது தவணை கோழிக்குஞ்சுகள் 50 சதவீத மானியம் ரூ.3,250க்கும், 3வது தவணை கோழிக்குஞ்சுகள் 30 சதவீத மானியம் ரூ.2,500க்கும் தமிழக அரசின் கால்நடை பராமரிப்புத்துறை மூலம் வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளுக்கு தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் மூலம் 5 நாட்கள் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு, சான்றிதழ் வழங்கப்படும். மருத்துவம் மற்றும் தடுப்பூசிகள் கால்நடை பராமரிப்புத்துறையால் வழங்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் ஒரு பயனாளிக்கு ஒருமுறை மட்டுமே மானியம் வழங்கப்படும். இத்திட்டம் கிராமப்புற பகுதிகளில் மட்டுமே செயல்படுத்தப்பட உள்ளது. 12 முதல் 14 வாரத்திற்குள் நாட்டுக்கோழி விற்பனை செய்யும் அளவிற்கு வளர்ந்து விடும் என்பதால் ஓராண்டில் 14 வார சுழற்சியில் 3 தவணைகளில் 250 கோழிகள் வளர்க்கும் வகையில் இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே நாட்டுக் கோழிப்பண்ணை அமைக்க ஆர்வம் உள்ள விவசாயிகள் கால்நடை பராமரிப்புத்துறை அல்லது அவர்களது குடியிருப்பு பகுதியில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மூலமாக விண்ணப்பிக்கலாம்.

பயனாளிகள் கடன் பெறுவதற்கு தகுதி உடையவராக இருக்க வேண்டும். வங்கிக்கடன் இல்லாமல் தன் சொந்த பணத்திலும் முதலீடு செய்து இத்திட்டத்தை பயன்படுத்தலாம். எனவே இத்திட்டத்தின் கீழ் நாகை மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் நாட்டு கோழி பண்ணை அமைத்து பயன்பெறவேண்டும்.

## மண்ணின் நீர்ப்பிடிப்பை அதிகரிக்க என்ன வழி வேளாண் துறை யோசனை

பதிவு செய்த நேரம்:2012-08-09 12:12:04

சிவகங்கை, : மண் ணின் நீர்பிடிப்பு கொள்ளள வை அதிகரிக்க பசுந்தாள் உரத்தை பயன்படுத்தலாம்.

இதுகுறித்து வேளாண்மைத்துறை அதிகாரிகள் கூறியதாவது: பசுமையான சிதைக்கப்படாத பொருட்களை உர மாக பயன்படுத்துவதே பசு ந்தாள் உரமாகும். இதனை பசுந்தாள் பயிர்களை வள ர்ப்பதன் மூலமாக பெற லாம். சணப்பு, தக்கைப்பூ ண்டு, பில்லி பயிறு, கொத்த வரை, அகத்தி ஆகியவை பசுந்தாள் பயிர்களாக உள் ளன. இவற்றை பயிரிட்டு போதுமான வளர்ச்சி அடைந்தவுடன் மண்ணில் உழ வேண்டும். சணப்பு பயிரில் 2.3 சதவீதம் தழைச்சத்தும், 0.5சதவீதம் மணிச்சத்தும், 1.8 சதவீதம் சாம்பல் சத்தும் உள்ளன. தக்கைப் பூண்டில் 3.5 சதவீதம் தழை ச்சத்தும், 0.6 சதவீதம் மணி ச்சத்தும், 1.2 சதவீதம் சாம்ப லம் சத்தும் உள்ளன. அகத்தியில் 2.71 சதவீதம் தழைச்சத்தும், 0.53 சதவீதம் மணிச்சத்தும், 2.21 சதவீதம் சாம்பல் சத்தும் உள்ளன. இந்த பசுந்தாள் உரத்தை பயன்படுத்துவதால் மண் ணின் தன்மை மேம்படும். மண் ணின் நீர்பிடிப்பு கொ ள்ளளவு அதிகப்படுத்தப் படும். மண் அரிப்பினால் ஏற்படும் இழப்பு குறைக்கப் படும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## பருவமழை ஏமாற்றியதால் மானாவாரிக்கு மாறும் விவசாயிகள்

பதிவு செய்த நேரம்:2012-08-09 12:08:48

கம்பம், : தென்மேற்கு பருவமழை ஏமாற்றி வருவதால் கிணறுகளில் நீர்மட்டம் குறைந்து பெரும்பாலான விவசாயிகள் மானாவாரி விவசாயத்திற்கு மாறி வருகின்றனர்.

கம்பத்தை சுற்றியுள்ள கிராமங்களில் நெல், தென்னை, வாழை, திராட்சை மற்றும் காய்கறிகள் அதிகள வில் பயிரிடப்பட்டு வந்தன. தற்போது தென்மேற்கு பருவமழை ஏமாற்றி வருவதாலும், முல்லை பெரியாறில் போதிய தண்ணீர் இல்லாததாலும் இப்பகுதியை சுற்றிலும் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. ஆழ்துளை கிணறுகள் மூலம் மின்மோட்டார் அமைத்து நடுத்தர விவசாயிகள் சிலர் காய்கறி பயிரிட்டுள்ளனர். ஆனால் நான்கு நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நிலத் தடி நீர்மட்டம் இறங்கி கொண்டே செல்வதால், பயிர்களை வளர்க்க முடியாமல் திணறி வருகின்றனர்.

இதனால் பெரும்பாலான விவசாயிகள் மானாவாரி பயிர்களான சோளம், கம்பு, கேழ்வரகு, துவரை உள்ளிட்ட பயிர்களை விதைத்து வருகின்றனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், தண்ணீர் பற்றாக்குறை மற்றும் மின்தடை காரணமாக

பலர் விவசாய தொழிலை விட்டு வேறு தொழிலுக்கு மாறி விட்டனர். எந்த காய்கறி பயிர்கள் பயிரிட்டாலும் தண்ணீர் பற்றாக்குறையால் முழுமையான விளைச்சல் பெற முடியவில்லை. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதால், வறட்சியையும் தாங்க கூடிய மானாவாரி விவசாயத்தில் இறங்கியுள்ளோம், என்றனர்.

---